இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 **நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி** instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 276 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 03 – புதன்கிழமை 17 மே 2023 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 276 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 03 - Wednesday 17 May 2023 - Trichy ★★ 8 Pages ₹ 5.00






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2023) விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## விழுப்புரத்திற்கு விரைந்து சென்று மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோரை சந்தித்து ஆறுதல்!

# கள்ளச் சாராயத்தை தடுக்க கடும் நடவடிக்கை!

## 4 மாவட்ட அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

விழுப்புரம், மே 17 -

**கள்ளச்சாராயம் குடித்து உடல் நலம் பாதிக்கப்பட்டு விழுப்புரம் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவோரை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். மேலும் அங்கு நடைபெற்ற நான்கு மாவட்ட அதிகாரிகள் டி.ஜி.பி.சைலேந்திர பாபு உள்ளிட்ட காவல்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்க கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு :-

கள்ளச்சாராயம் அருந்தியதால் உடல் நிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை விழுப்புரத்தில் நேரில் சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நலம் விசாரித்தறிந்தார். அத்துடன் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர்களிடம் விசாரித்து அறிந்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே உள்ள எக்கியார்குப்பம் பகுதியைச் சேர்ந்தவர்கள் கள்ளச்சாராயம் அருந்தியதால் 11 பேர் உயிரிழந்துள்ளார்கள். 40க்கும் மேற்பட்டவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு முண்டியம்பாக்கத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**நிதியுதவி வழங்க முதல்வர் உத்தரவு!**

இதற்கிடையே இது குறித்து தகவலறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சமும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் நிதி வழங்க உத்தரவிட்டிருந்தார்.

அது மட்டுமின்றி தமது வேதனையையும் அதிர்ச்சியையும் வெளிப்படுத்தி அறிக்கை வெளியிட்டிருந்தார்.

மெத்தனமாகச் செயல்பட்ட இப்பகுதியைச் சேர்ந்த காவல் துறை அதிகாரிகள் 7 பேரை தற்காலிக பணி நீக்கம் செய்து முதல்வர் உத்தரவிட்டார்.

**தனிப்படை அமைத்து தேடுதல் வேட்டை!**

கள்ளச் சாராய விற்பனையை செய்து வந்தவர்களை தேடும் பணியில் தனிப்படை அமைத்து காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (15.5.2023) விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கள்ளச்சாராய உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திரபாபு, காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) கி. சங்கர், விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி. பழனி, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல் நாத், வடக்கு மண்டல காவல்துறை தலைவர் டாக்டர் என். கண்ணன், விழுப்புரம் சரகம் காவல்துறை துணைத் தலைவர் பி. பகலவன், விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர் நா. ஸ்ரீநாதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**குடும்பத்தினருக்கு முதல்வர் நேரில் ஆறுதல்!**

இதற்கிடையே, கள்ளச் சாராயம் அருந்தி உயிர் நீத்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறவும், சிகிச்சை பெற்று வருபவர்களைச் சந்தித்து நலம் விசாரிக்க வும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் சென்றார். பின்னர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் அவர்களது குடும்பத்தாரையும் சந்தித்து, அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்று உறுதி அளித்தார்.

முதல்வருடன் அமைச்சர்கள் க.பொன்முடி, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் சென்றிருந்தனர்.

தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்துறை செயலாளர் பெ. அமுதா, டி,ஜி.பி. சைலேந்திரபாபு, விழுப்புரம் - கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சியர்கள் காவல்துறை கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் கள்ளச் சாராயம் ஒழிப்பது


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


## குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

# கள்ளச் சாராயம்: வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றம்!

## விழுப்புரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

விழுப்புரம், மே 17 -

**கள்ளச் சாராய வழக்கு சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்படும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் விழுப்புரத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது குறிப்பிட்டார்.**

விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய பின்னர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம்அருகேஇருக்கக்கூடியஎக்கியார் குப்பம் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த பலர் கள்ளச் சாராயம் அருந்தியதால் உடல்நிலை பாதிக்கப்பட்டனர்.

இது அரசினுடைய கவனத்திற்கு வந்தவுடன் விழுப்புரம் மாவட்டம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைகளுக்கு, அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டு, உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் இதுவரை 9 பேர் இறந்திருக்கிறார்கள். மேலும் 40 பேர் முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலும், 3 பேர் ஜிப்மர் மருத்துவமனையிலும், ஒருவர் புதுச்சேரி அரசு மருத்துவமனையிலும் தற்போது சிகிச்சைப் பெற்று கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் வழங்கி உயிர்களைக் காப்பாற்றிடுமாறு மருத்துவர்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மெத்தனால் எரிசாராயத்தைப் பயன்படுத்தியதால் துயரச் சம்பவம்!**

இந்தச் சம்பவம் தொடர்பான முதல்கட்ட விசாரணையில், கள்ளச் சாராயம் விற்ற குற்றவாளிகள், மெத்தனால் எரிசாராயத்தை பயன்படுத்தியதால் இந்த துயரச் சம்பவம் ஏற்பட்டுள்ளது எனத்தெரியவந்துள்ளது.

இதில் ஈடுபட்டவர்கள் காவல் துறையின் நடவடிக்கையால் உடனடியாக கைதும் செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும் இந்தச் சம்பவம் நடைபெற காரணமாயிருந்த அனைவரையும் கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் காவல்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

செங்கல்பட்டு மாவட்டம், பெருக்கரணை கிராமத்தில் 5 பேர் கள்ளச் சாராயம் குடித்து இறந்த துயரச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

**செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் 7 பேர் சிகிச்சை!**

மேலும் 7 நபர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களும் உடனடியாக காவல் துறையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணையின்போது, இங்கும் கள்ளச் சாராயம் விற்பனைச் செய்துள்ளவர்கள் மெத்தனால் பயன்படுத்தியுள்ளதாகவும் டாஸ்மாக் நிறுவனத்தினுடைய பாட்டில்களில் கள்ளச் சாராயத்தை ஊற்றி விற்பனை செய்திருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது.

இந்த இரு சம்பவங்களில் உயிரிழந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.10 லட்சம் வழங்கிட உத்தரவிட்டிருக்கிறேன்.


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


## 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 1 தேர்வு முடிவுகள்

### மே 19 ஆம் தேதி வெளியீடு!

சென்னை, மே 17 -

தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத் தேர்வுகள், கடந்த ஏப்ரல் 6 முதல் ஏப்ரல் 20ஆம் தேதி வரை 3986 தேர்வு மையங்களில் நடத்தப்பட்டன. இந்த தேர்வினை சுமார் 9,96,089 மாணவ - மாணவிகள் எழுதினர்.

அதேபோல, 11ஆம் வகுப்பு தேர்வுகளும் இதே சமயத்தில் நடந்து முடிந்தன. இதனிடையே 10ம் வகுப்பு மற்றும் 11 ம் வகுப்புகளுக்கு எப்போது ரிசல்ட் வெளியிடப்படும் என கேள்வி எழுந்திருந்தது. முன்னதாக பிளஸ் 2 தேர்வு முடிவுகள் கடந்த 8ஆம் தேதி வெளியாகி இருந்தது.

இந்நிலையில் 10ஆம் வகுப்பு மற்றும் பிளஸ் 1 தேர்வு முடிவுகள் மே 19 ஆம் தேதி வெளியிடப்பட உள்ளதாக அரசு தேர்வுத் துறை இயக்ககம் அறிவித்துள்ளது. இதன்படி 2022-23ஆம் கல்வி ஆண்டுக்கான 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகள் மே 19ஆம் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படும் என்றும் அதே தினம் பிற்பகல் 2 மணிக்கு பிளஸ் 1 தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்வு முடிவுகள் www.tnresults.nic.in மற்றும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட உள்ளதாகவும், பள்ளி மாணவர்கள் சமர்ப்பித்த செல்போன் எண்ணிலும் குறுஞ்செய்தி மூலமாகவும் தேர்வு முடிவுகள் அனுப்பப்படும் என்றும் தேர்வுத்துறை தெரிவித்துள்ளது.